**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 5, Issue - 1, November 2025** **E-ISSN: 2583-0481**

# Humanistic Thoughts and Personality of Auvaiyar

**Dr. R. Jaisankar,** Associate Professor of Tamil (CDOE), Bharathidasan University, Thiruchirappalli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2959-6384**
**DOI: 10.5281/zenodo.18880166**
**Received:** 25 August 2025, **Revised:** 20 September 2025, **Accepted:** 11 October 2025, **Available online:** 26 November 2025.

## Abstract

*Humanistic thoughts have not developed to the extent that science has developed worldwide. As a result, many economic crises and wars have occurred in countries, resulting in the loss of thousands of lives. Environmental degradation caused by scientific development has changed the way of life of human society. Moreover, the humanity prevailing among people is gradually decreasing. In this environment, this article presents the need to develop humanistic thoughts among the people of the world. Through the 33 songs of Auvaiyar included in the Purananuru, it can be seen that Auvaiyar's humanistic thoughts, deep experience, keen knowledge, and clear thinking have emerged as an excellent political personality. Although Auvaiyar has praised heroism in his songs, it can be seen that he emphasizes that humanity, unity, and energetic activities are needed by human society more than heroism.*

**Keywords:** Auvaiyar, Humanity, War, Heroism, Environment, Politics, Personality.

## References

[1] Iravi, Ke. *Pattuppattinil Aalumai Valarcci.* Nila Suriyan Patippakam, Chennai, 2017.
[2] Ragulan, Ira., and Tanalakshmi, Va. "Kaniyan Pungunranarin Patalil Uzh, Pakuttarivuk Kolkai, Nilaiyamai Piravik Kotpatu." *Manarkeni,* Volume 2, Issue 9, No.74, July - 2025, p. 98.
[3] Krishnamurti, Je. *Samukaviyal Kotpadukal.* Annamalaip Palkalaikkalam, Chidambaram, 2000.
[4] Subbiah, Aranga. *Samukaviyal Arignarkalum Kotpadukalum.* Rajeswari Puttaka Nilayam, Chennai, 2003.
[5] Sindu, Ku., and Ira. Raviccandiran. "Mullaippattil Mantarkalin Mananilai." *Manarkeni,* Tokuti - 2, Volume 9, Issue 74, July – 2025, p. 22.
[6] Susa. "Viveka Cintamani Kurum Manuta Vizhumiyangal." *International Journal of Tamil Language and Literary Studies,* Volume -7, Issue -2, January - 2025.
[7] Natarasan, Ti. Cu. *Kavithaiyenum Mozhi.* 2002. NCBH, Chennai, 2003.
[8] Noel Joseph Irudayaraj. *Kotpaattu Vimarsana Yugam Vimarsanak Kotpaattu Yugam.* Adaiyalam Patippakam, Trichy, 2013.
[9] Bhaktavatsala Bharati. "Manita Neyattirkana Arivut Turaie Mandaviyal." *Kalaccuvatu,* Volume 37, Issue 8, No. - 308, August -2025, p. 53.
[10] Manikkavacakan. *Purananuru.* Uma Patippakam, Chennai, 1998.
[11] Muniyandi, Ci. "Purananurrup Patalgalal Ariya Varum Valkkai Tattuvangal." *Tamil Mozhi Matrum Ilakkiyap Pannattu Aayvital,* Tokuti - 8, Veliyitu -1, July – 2025, p. 375.
[12] Vignesh, Ka. "Oppilakkiya Nokkil Kuruntokaiyum Salomon Patalgalum." *Peyal,* Tokuti - 8, Tulir -1, October -2021 - March – 2022.
[13] Jeyasankar, Ira. *Pulavar Teriyata Nattrinai Patalgalil Aalumai Tiram.* Tayaram Patippakam, Trichy, 2003.

**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# ஔவையாரின் ஆளுமையும் மனிதநேய சிந்தனைகளும்

**முனைவர் இரா.ஜெய்சங்கர்,** தமிழ் இணைப்பேராசிரியர் (CDOE),
பாரதிதாசன் பல்கலைக்கழம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-2959-6384**
**DOI: 10.5281/zenodo.18880166**

**ஆய்வுச் சுருக்கம்**

*உலக அளவில் அறிவியல் வளர்ந்த அளவிற்கு மனிதநேயச் சிந்தனைகள் வளரவில்லை. இதனால் பல நாடுகளில் பொருளாதார நெருக்கடிகளும், போர்களும் ஏற்பட்டு பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்பலியாவது தொடர்கதையாகவே உள்ளது. அறிவியல் வளர்ச்சியினால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு ஆகியவை மனித சமூகத்தின் வாழ்வியலை மாற்றியுள்ளன. மேலும், மக்கள் மத்தியில் நிலவும் மனிதநேயம் மெல்ல, மெல்ல குறைந்து வருகிறது. இச்சூழலில் உலகமக்களிடைய மனிதநேயசிந்தனை வளர்த்தெடுக்கவேண்டிய அவசியத்தை இக்கட்டுரை முன்வைக்கிறது. புறநானூற்றில் இடம்பெறும் ஔவையாரின் 33 பாடல்கள் வழி ஔவையாரின் மனித நேய சிந்தனைகள், ஆழ்ந்த அனுபவம், கூர்ந்த அறிவு, தெளிந்த சிந்தனை ஆகியவை மிகச்சிறந்த அரசியல் ஆளுமையாக வெளிப்பட்டுயிருப்பதைக் காணமுடிகிறது. ஔவையார் தனது பாடல்களில் வீரத்தைப் பாராட்டியிருப்பினும் வீரத்தைவிட மனிதநேயம்,ஒற்றுமை, ஆற்றல்மிக்கச் செயல்பாடுகள் மனிதசமூகத்திற்குத் தேவை என்பதை வலியுறுத்தியிப்பதைக் காணமுடிகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** மனிதநேயம், போர், வீரம், அறிவியல் வளர்ச்சி, சுற்றுச்சூழல் சீர்கேடு, அரசியல் ஆளுமை.

**முன்னுரை**

எட்டுத்தொகை நூல்களில் புறநானூறு பண்டையத் தமிழரின் வீரம் மிகுந்த வாழ்வியலை விவரிக்கக் கூடிய தலைசிறந்த நூலாகும். புறநானூற்றில் இடம்பெறும் 400 பாடல்களில் 33 – பாடல்களை ஔவையார் பாடியுள்ளார். அவை; புறநானூறு, பா. 87-104, 140, 87, 206, 231, 232, 235, 269, 286, 290, 295, 311, 315, 367, 390, 392. இப்பாடல்கள் வழி ஔவையாரின் ஆளுமை மற்றும் மனிதநேயசிந்தனையை அறிதல் இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. மேலும், ஆளுமை குறித்த அறிஞர்களின் கருத்துக்களுடன், ஔவையாரின் பாடல்வழி அவரின் ஆளுமை, மற்றும் மனிதநேயம் ஒப்பு நோக்கப்பட்டு விவரிக்கப்படவுள்ளன. எனவே இவ்வாய்வுக் கட்டுரையில் ஒப்பீட்டு முறைத் திறனாய்வு மற்றும் விளக்கம் முறைத் திறனாய்வு பின்பற்றலாகிறது.

**ஆளுமை**

சங்க இலக்கியம் நமது முன்னோர்களின் சிந்தனைகளை அறிய உதவும் ஆவணம். சங்க காலப் புலவர் பெருமக்கள் பல்வேறு சிறப்புகளையும், தகுதிகளையும் கொண்டவர்கள். அவர்கள் தங்களது திறமைகளை (அ) படைப்பாற்றலை பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்தி உள்ளனர். இதன் வாயிலாக அவர்களின் ஆளுமையை அறியமுடிகிறது. ஆளுமை என்பது ஆயிரக்கணக்கான இழைகளால் சமுதாயத்துடன் பிணைக்கப்பட்ட ஒன்றாகும். அறிஞர் பெருமக்களிடையே ஆளுமை பற்றி மாறுபட்ட கருத்து நிலவுகின்றது. ஒருவனது குடும்பம், அவன் வாழும் சூழ்நிலை, பாரம்பரியம், இயல்பாக அமையயும் உள்ளக் கிளர்ச்சி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடன் உருவாகுவது ஆளுமைத் திறம் என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது. **வின்சுலோவின் ஆங்கில-தமிழ் அகராதி ஆளுமை**

**பற்றி விவரிக்கும் போது, தனி மனிதரிடம் உள்ள வேறுபட்ட செயற்பண்பு நிலையில் ஒன்று எனக் கூறுகின்றது. (புலவர் தெரியாத நற்றிணைப் பாடல்களில் ஆளுமைத்திறம், ப. 9)**

> **ஒரு மனிதனின் உலகக் கண்ணோட்டம் அல்லது உலகளாவிய பார்வைதான் ஆளுமையின் மைய உட்கருவாக விளங்குகின்றது. அவற்றில்தான் மனிதனின் கோட்பாடுகளும், இலட்சியங்களும், வாழ்க்கை நோக்கங்களும் உருக்கொண்டு, அவனுடைய சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஆளுமை வெளிப்படுகின்றது. மேலும் அழகியல், கலை, இலக்கியம் ஆகியவை உருப்பெறுவது ஆளுமையின் பிரத்யோகமான செயற்பாடுகள்தான் என்று குறிப்பிடுகிறது. (கவிதையெனும் மொழி, ப. 128)**

ஆளுமை என்ற சொல்லானது ஆங்கிலத்திலுள்ள பர்சனாலிட்டி(personality) என்னும் சொல்லுக்கு இணையானது. பர்சனாலிட்டி (personality) என்னும் சொல் தோன்றிய காலத்தில் ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம் என்பதாக இருந்தது. ஆனால் இன்று ஆளுமை என்ற சொல், வழக்கில் பல பொருள்களில் எடுத்தாளப்படுகிறது. உளவியல் அகராதி,

> **ஆளுமை என்றால் நன்றாகவும் அழகாகவும் திடமிக்கவராகவும் இயல்பு, நேர்மை, நட்புணர்வு, அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம், நன்றியணர்வு, தந்திரம் போன்ற பண்புகளைக் கொண்ட இயல்பும் நடத்தையும் சேர்ந்த மொத்த கலவை என்று குறிப்பிடுகின்றது (பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி, ப. 28).**

சிறப்பான ஆளுமையைப் பெற்றுத் திறனை வெளிப்படுத்துவது ஆளுமைத் திறனாகும். மேலும், ஆளுமை வெளிப்படும் விதமானது.

> **நம்பிக்கை, நேர்மை, ஒழுக்கம், உண்மை,கடமை, விழிப்புணர்வு, சுறுசுறுப்பு, சிக்கலைத் தவிர்த்தல், சரியான நேரத்தைக் கடைப்பிடித்தல், நேரத்தைப் பயன்படுத்தல், கால எல்லைக்குள் முடித்தல், கவனக்குறைவின்மை, சுய கட்டுப்பாடு மன உளைச்சலைத் தவிர்த்தல், உணர்ச்சிவயப்படாதிருத்தல், கவர்ச்சியாக இருத்தல், மிடுக்காக இருத்தல் போன்ற பல பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருப்பது அல்லது தனித்தனி நிலைகளில் செயலாற்றும் போது வெளிப்படும் தன்மையை ஆளுமை வெளிப்படும் விதமாக் கருதலாம் என்று** இரவி,கெ,. **கூறுகிறார். (பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி, ப. 40)**

**சிக் மெண்ட் ஃப்ராய்ட் ஆளுமை வளர்ச்சியை மூன்றாகப் பிரித்துக் காட்டுகின்றார். அவை;**

**1. பண்பாடா உள்ளம்**

**2. தன்முனைப்பு (Ego)**

**3. மேம்பட்ட தன்முனைப்பு (Super Ego)**

> **ஓர் இலக்கியப் படைப்பு என்பது படைப்பாளனின் உள்ளத்தையும் மூளையையும் ஒட்டியது. மேலும், அவர்களது உணர்ச்சியையும் அறிவையும் பொருத்துத் தனிப்பட்ட அனுபவமாக அவனது படைப்பில் பதிவு செய்யப்படுகிறது. படைப்பாளியின் ஆழ்ந்த அனுபவம், கூர்ந்த அறிவு, தெளிந்த சிந்தனை, புதுமையான கற்பனை புரட்சிக் கருத்துக்கள், படைப்பாளியின் தனிப்பட்ட அனுபவத்தின் வெளிப்பாடாக அமையத் துணை புரிகின்றன. காலத்தை வென்று ஒரு படைப்பு நிலைத்த புகழோடு இருக்கின்றதென்றால் அதற்குப் படைப்பாளியின் தனிப்பட்ட அனுபவம், படைப்பாளுமைதான் காரணமாக இருக்கமுடியும். (சமூகவியல் அறிகர்களும் கோட்பாடுகளும், ப. 71)**

இக்கட்டுரை மேற்காணும் அறிகர்களின் சிந்தனைகள் உள்வாங்கி ஔவையாரின் ஆளுமையையும் மனிதநேய சிந்தனைகளையும் புலப்படுத்த முனைகிறது.

**ஔவையார் – அதியமான்**

தகடூர் என்று வரலாற்றில் அழைக்கப்பட்ட இன்றைய தர்மபுரியை தலைநகராகக்

கொண்டு ஆட்சி செய்தவன் அதியமான் நெடுமான் அஞ்சி. இக்குறுநில மன்னன் வீரமும் கொடைத் தன்மையும் கொண்டு சிறப்பாக ஆட்சி செய்தவன். பாரிக்கு உற்றத் தோழனாகக் கபிலர் எப்படித் திகழ்ந்தாரோ அதுபோல அதியமான் நெடுமான் அஞ்சிக்கு ஔவையார் உற்றத் தோழமையாக திகழ்ந்திருப்பதை அவர் பாடல் வழி அறிய முடிகிறது. கபிலர் பாரியின் பறம்புமலை மற்றும் அவனது வீரம், கொடைத்தன்மை குறித்துப் புறநானூற்றில் 40 பாடல்கள் பாடியுள்ளார். அதுபோல அதியமானின் தகடூர் மற்றும் அவனது வீரம், கொடைத்தன்மை குறித்துப் புறநானூற்றில் 28 பாடல்கள் பாடியுள்ளார். இருவரின் பாடல்களிலும் நிறைய ஒற்றுமை இருப்பதைக் காணமுடிகிறது.இதனைத் தனி ஆய்வாக மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

**அதியமான் வீரம்**

ஒரு நாளைக்கு எட்டுத் தேர் செய்யும் தச்சன், ஒரு மாதம் முழுவதும் ஆயராது உழைத்து, ஒரு தேர்கால் செய்தால் எவ்வளவு வலிமையாக, அழகாக இருக்குமோ அதுபோல அதியமான் வலிமையும், அழகும் உடைய மாவீரன். அவன் பகைவர்களிடம் சீறிப்பாயும் பாம்பு போன்றவன். கணை மரத்தை ஒத்த வலிமைமிக்கத் தோளினை உடைய வீரர்களைக் கொண்டவன்.தனது உடலில் பல விழுப்புண்களைத் தாங்கிய பெருமைக்குரியவன். புலவர்களுக்கு இனிமையானவனாகவும், பகைவர்களுக்கு மதம் பிடித்த யானை போல் துன்பத்தைத் தரக்கூடியவனாகவும் இருந்துள்ளான். மேலும், அதியமான் ஏழு அரசர்களை எதிர்த்துப் போர் செய்தபோது அவர்களை வென்று வெற்றி வாகைச் சூடியப்பாங்கினை மிகவும் நேர்த்தியான, அழகான ஊமைகள் வாயிலாக விவரித்துள்ளார். பரணர் புகழ்ந்து பாடும் பேரு பெற்றவன் அதியமான் என்பதை ஔவையார் பாடியிருப்பதை முறையே புறநானூறு, பா. **87, 89, 90, 93, 99** அகியப்பாடல்களில் காணமுடிகிறது.

**திங்கள் வலித்த கால் அன்னோனே (புறநானூறு, பா. 87: 4)**
**எறிகொல் அஞ்சா அரவின் அன்ன (புறநானூறு, பா. 89: 5)**
**எழு மரம் கடுக்கும் தாள் தோய் தடக்கை (புறநானூறு, பா. 90: 10)**
**பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே (புறநானூறு, பா. 93: 15)**
**இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்**
**சென்று அமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய**
**பரணர் பாடினன் மன்கொல் மற்றுநீ (புறநானூறு, பா. 99: 12 )**

அதியமான் சிறுவனாக இருப்பினும் அவன் திறமையான ஆற்றல் உடையவன் அவனிடம் பகை கொள்ள வேண்டாம் நீங்கள் அழிவது உறுதி என்று அதியமானிடம் போரிடநினைத்த அரசர்களிடம் ஔவையார் எச்சரிப்பதைக் காணமுடிகிறது. மேற்காணும் பாடல் வரிகளில் ஔவையார் சிறந்த உவமையைக் கையாண்டு அதியமானின் வீரத்தைப் பல்வேறு கோணங்களில் விவரித்துள்ளார். இது ஔவையாரின் ஆழ்ந்த அனுபவம், கூர்ந்த அறிவு, தெளிந்த சிந்தனையை வெளிப்படுத்தக்கூடிய ஆளுமையாக வெளிப்பட்டு இருப்பதைக் காணமுடிகிறது.

**மரபும் வீரமும்**

அரசமரபில் குழந்தைப் பிறந்தவுடன், பிறந்த பிள்ளை சிறந்த வீரனாக வளர்வதற்கு அக்குழந்தையின் தந்தை போர்க் கோலத்தோடு சென்று அப்பிள்ளையைக் காண்பது தமிழ் மரபு. அதன்படி போர்க்களத்தில் இருந்த அதியமான். தனது மகன் பொகுட்டெழினி பிறந்த செய்தி கேட்டுக் கையிலே வேல், காலிலே வீரக்கழல், உடல் முழுவதும் வேர்வைத்துளி, கழுத்தில் உலராத புண்ணுடன் தலையில் வெட்சிப்பூ சூடி, வரிப் புலியோடு போரிட்ட வலிமைமிக்க யானையைப் போல், தீராத சினத்துடன், சிவந்த கண்களுடன், தன் மகனைப் பார்க்க வருகிறான். அக்காட்சியை ஔவையார் உணர்வுப்பூர்வமாகப் பதிவு செய்திருப்பதைக் காணமுடிகிறது சிறுவனை நோக்கியும் சிவப்பு ஆனாவே. (புறநானூறு, பா. 100: 11)

மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**மனித உணர்வுகளை இயற்கையின் பின்னணியில் கூறுதலும் அவை மனித உணர்வுகளுக்குக் குறியீடாதலும் சங்க கவிதையின் பொதுவான பண்பாக அமைந்துள்ளது. (ஒப்பிலக்கிய நோக்கில் குறுந்தொகையும் சாலொமோன் பாடல்களும், பெயல், ப. 65)**

இக்கூற்றானது ஔவையாரின் ஆளுமைக்கு வலுசேர்ப்பதாக அமைகிறது. மேலும், இப்பாடலில், அதியமான் வீரத்தை மிக நேர்த்தியான உவமை வாயிலாகவும் அவன் போர்கோலத்துடன் தன் மகனை கண்டு மகிழ்ச்சியடையும் சூழலில் அதிமானின் வீரத்தைப் பாராட்டுதலும் தமிழரின் மரபுகாத்தலும் ஔவையாரின் ஆளுமைவெளிப்பாடாக அமைவதைக் காணமுடிகிறது. மற்றொரு பாடலில் (புறநானூறு, பா. 104) கணுக், கால் அளவுள்ள நீர் நிலையாக இருந்தாலும் அந்த நீரில் வாழும் முதலை பலம்மிக்க யானையையும் கொன்றழிக்கும் வலிமை உடையதாக இருக்கும். அதுபோல,

**ஈர்ப்புடைக் கராஅத் தன்ன என்னை (புறநானூறு, பா. 104:4)**

**தனக்கு வரும் இன்ப, துன்பங்களை நேர்செய்துகொள்ள புலனடக்கம் அல்லது பேரறிவு தேவையாகிறது (கணியன் பூங்குன்றனாரின் பாடலில் ஊழ், பகுத்தறிவுக் கொள்கை, நிலையாமை பிறவிக் கோட்பாடு, ப. 98)**

கூற்றுக்கிணங்க; அதியமான் சேரமானோடு போரிட்டுப் போர்க்களத்தில் வீரமரணம் அடைகிறான். அவனது உடலானது சிதை நெருப்பில் கிடத்தப்பட்டு ஏரியூட்டப்படுவதைக் கண்டு, கலங்கி நின்ற ஔவையார், அதியமான் உடலை நெருப்பு அழித்தாலும் அவனதுபுகழும், பெருமையும், வீரமும், நிலவும் சூரியனும் போல ஒருநாளும் அழியாது, அழிக்க முடியாது என்பதை அவலச்சுவையோடு பதிவுசெய்து இருப்பதன்வழி ஔவையாரின் ஆளுமை மற்றும் மனிதநேய மாண்பை அறிந்து கொள்ளமுடிக்கிறது.

**திங்கள் அன்ன வெண் குடை**
**ஒண்ஞாயிறு அன்னோன் புகழ்மா யலவே (புறநானூறு, பா. 231.5).**

**ஒரு கலைஞனின் உணர்ச்சி, அனுபவம் அக்கலைஞன் படைத்த கலையின் வடிவத்தில் புலப்படும். உணர்ச்சிக்கு வடிவம் தந்து அதை கலையாக்கும் திறமை ஒரு சிலருக்கே உள்ளது. அவர்களால்தான் வாழும் இலக்கியங்களைப் படைக்க முடியும் என்பார் மு.வரதராசனார் (பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி, ப. 77)**

இச்சிந்தனைக்கு இணங்க, மேற்காணும் பாடலில் ஔவையார் தனது உணர்சிக்கு வடிவம் கொடுத்திருப்பதைக் காணமுடிகிறது.

ஔவையார் புறநானூறு, பா. 96, 102, 392. ஆகிய பாடல்களில் ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதியமான் நெடுமானஞ்சியின் மகன் பொகுட்டெழினியின் அழகு, கொடை, வீரம், விருந்தோம்பும் சிறப்பு ஆகியவற்றை மிகச் சிறப்பாக விவரித்துள்ளார். தந்தையை விட வீரமும், பசித்தவர்களுக்கு உண்ணத் தகுந்த முறையில் மட்டுமல்லாமல் உண்பவர் உண்ணும் முறை அறிந்தும் விருந்து படைக்கும் மிகச் சிறந்த தலைவன் பொகுட்டெழினி என்பதை உவமை நயத்துடன் விவரித்திருப்பதில் ஔவையாரின் படைப்பாளுமையைக் காணமுடிகிறது.

**ஈகை, அன்பு, நட்பு, புகழ், இன்பம், பிறருக்கு உதவுதல், அறிவுரைத்தல். மேலும் இயற்கை இடமிருந்தும் பிற உயிரினங்ளிடம்மிருந்தும் கற்ற பாடங்களை பகுத்தறிந்து நெறிப்படுத்தி வாழ்வியல் விழுமியங்களாக இலக்கியங்களில் புலவர்கள் பதிவு செய்வர்(விவேக சிந்தாமணி கூறும் மானுட விழுமியங்கள், ப. 79).**

இக்கூற்றுக்கு வலுசேர்க்கும் விதமாக; வறுமையில் வாடிய பாணர்கள் சமைப்பதற்குக் கொஞ்சம் அரிசி கிடைத்தால் போதும் என்று ஓங்கி உயர்ந்த நாஞ்சில் மலையை ஆட்சி செய்த நாஞ்சில் வள்ளுவனைப் பார்க்கச் சென்ற பொழுது அவன் யானையவே பரிசாகக் கொடுப்பதைக் கண்டு வியப்படைந்த ஔவையார் பெரியோர்கள் தங்கள் கடமைகளை வரைமுறை பார்த்துச் செய்ய மாட்டார்களோ? என்று நாஞ்சில் வள்ளுவனது

கொடைத்தன்மையைப் பாராட்டியிருப்பதில் புலவரின் மனிதநேய ஆளுமையைக் காண முடிகிறது. **பெருங்களிறு நல்கி யோனே யன்னதோர் (புறநானூறு, பா. 140: 8)**

**நாட்டு வளம் - ஆற்றல் மிக்க ஆடவர் கையில்**

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக மழைக்காலத்தில் வரலாறு காணாத மழை என்று கூறுவதும், கோடை காலத்தில் வறட்சியின் பிடியில் சிக்கி தவிப்பதும் வாடிக்கையான ஒன்றாகத் திகழ்கிறது. ஆட்சியாளர்கள் ஒருவரை ஒருவர் பழிதூற்றிக்கொள்வதில் போட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழரின் வரலாற்றைத் திருப்பிப் பார்க்கின்ற பொழுது, நீர் மேலாண்மையில் சிறந்தவர்களாகத் தமிழர்கள் இருந்திருப்பதைக் காணமுடிகிறது. புதியதாக ஏரி, குளங்களை உருவாக்காவிட்டாலும் இருக்கின்ற ஏரி, குளங்களை ஆக்கிரமிப்புச் செய்யாமல், அவைகளைத் தூர்வாரி, மராமத்து பணிகளைச் செய்தாலே போதும் நாட்டில் வளம்பெருகும். இதனை நன்கு உணர்ந்த ஔவையார் தேசத்தின் வளமும், இயல்பும், பண்பும் அத்தேசத்தில் வாழும் ஆற்றல்மிக்க இளைஞர்களின் செயலைப் பொறுத்து அமையும் என்பதை

**நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ**
**அவளாக ஒன்றோ மிசையாக ஒன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நலனே (புறநானூறு, பா. 187)**

என்ற பாடல் வழி புலப்படுத்தி இருப்பதைக் காணமுடிகிறது. **அறிவு நிலையிலிருந்து அரசு நிலை உருவானால் தான் அர்த்தமுள்ள மாற்றம் நிகழும் (மனித நேயத்திற்கான அறிவுத் துறையே மாண்டவியல், ப. 53).** இவரின் சிந்தனைக்கு ஏற்ப, ஒரு நாட்டின் நிலப்பரப்பு காடாக இருந்தாலென்ன பள்ளமாக இருந்தாலென்ன, மேடாக யிருந்தாலென்ன அங்கு நல்ல ஆண்மக்கள் இருந்தால் போதும் அந்நிலங்கள் சீர் செய்யப்பட்டு வளமான நிலப்பரப்பாக மாற்றப்படும் என்பது ஔவையாரின் ஆளுமையாகப் புலப்படுகிறது. நம் நாட்டில் இளைஞர்களுக்குப் பஞ்சமில்லை, ஆனால் இளைஞர்களை முறையாக நெறிப்படுத்தி வழிகாட்டுவதற்குச் சான்றோர்கள் தான் இல்லை. நீர் ஆதாரங்களைப் பெருக்குதல், மழை நீரை சேமித்தல், சேமித்த நீரை முறையாகப் பாசனம் செய்தல் இவற்றில் போதுமான அறிவும் அனுபவமும் இருந்தும் அடுத்தடுத்த தலைமுறையினருக்கு அதனைக் கொண்டு சேர்க்காமல் பல அவலங்களை நாம் சந்தித்து வருகிறோம்.

**தனிமனித ஆளுமை வளர்ச்சி என்பது தனி மனிதன் தன்னை மேம்படுத்தித் தனக்காக வாழ முற்படுவது. அதே ஆளுமையைக் கொண்டு தன்னைச் சார்ந்தவர்களையும், எல்லா உயிர்களையும் வாழவைத்து, சமூகம் மேம்படச் செயல்படுதல் சமூக மேம்பாட்டுக்கான ஆளுமை வளர்ச்சி என்கிறார் இரவி. (பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி, ப. 29)**

இக்கூற்றுக்கிணங்க, ஔவையாரின் ஆளுமையானது தனிமனித ஆளுமையாக அமையாமல் சமுதாய மேம்பாட்டிற்கான ஆளுமைச் சிந்தனையாக அமைவதைக் காண முடிகிறது.

அதியமான் மிகச் சிறந்த வீரன் மட்டுமல்ல, அவன் மிகச்சிறந்த கொடை வள்ளலாகவும் திகழ்ந்தவன். அத்தகைய சிறப்புடைய அதியமான் நெடுமானஞ்சியின் மார்பில் அவனுடைய எதிரிகளால் தைத்த வேலானது அழகிய சொற்களை ஆராய்ந்து பாட வல்ல புலவர்கள் நாவிலும் சென்று தைத்தது என்று ஒவையார் பதிவு செய்துள்ளார்.இக்கூற்றானது அதிகார மாற்றம் எதிர்தரப்பின் கருத்துரிமையை நசுக்கும் என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

**அம்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்**
**சென்றுவீழ்ந்த தன்று அவன்**
**அருநிறத்து இயங்கிய வேலே (புறநானூறு, பா. 235: 13-15)**

பிறருக்கு உதவி செய்யாமல் வாழ்கின்ற பல உயிர்கள் உலகில் இருக்க. உதவி செய்கின்ற நீ (அதியமான்) இறந்து விட்டாயே, வறுமையில் வாடும் புலவர்களின் நிலை என்ன ஆவது என்று தனது கையறு நிலையை வெளிப்படுத்தி ஒவையார். அதியமான் புலவர்களிடம்

அன்பானவனாகவும், இறவானத்தில் செருகப்பட்ட தீக்கடையும் கோல் போல அமைதியாக இருப்பான். ஆனால் போர்க்களத்தில் எதிரிகளிடம் தீக்கடையும் கோலைக் கடைந்தால் பொங்கி யெழும் தீப்போலக் கனன்று எழுவான் என்று அழகிய ஊமை வாயிலாக அவனுடைய கொடையையும் வீரத்தையும் ஒரு சேர புறம். 315 ஆம் பாடலில் பதிவு செய்திருப்பது அவருடைய படைப்பாளுமையை வெளிப்படுத்தும் வண்ணம் அமைகிறது.

**இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போல (புறநானூறு, பா. 315: 4)** சங்ககாலத்தில் போர்க்களம் செல்வதற்கு முன்பு பாசறையில் வீரர்கள் பற்றிய அறிமுக உரைநடைபெறும். பின்பு மன்னர் வீர உரையாற்றிப் போர் வீரர்களுக்குத் தன் கையால் உணவினை வழங்குவார். இந்த நிகழ்விற்கு உண்டாட்டு என்று பெயர். இதற்குப் பின்பு வீரர்கள் போர்க்களம் செல்வார்கள் இந்நிகழ்வு தமிழ் மரபாக இருந்திருப்பதை ஔவையார் பதிவு செய்துள்ளார். இவ்வாறு போர்க்களம் சென்ற வீரன் ஒருவன் மிகச் சிறப்பாகப் போர் செய்து உயிருடன் திரும்புகின்றான். அந்த வீரனின் தாய் தன் மகன் உயிரோடு திரும்பி வந்தது மகிழ்ச்சி என்றாலும். அவன் விழிப்புண் பெற்றுப் போர்க்களத்தில் இறக்கும் பாக்கியம் கிடைக்கவில்லையே என்று ஏங்குகின்றாள் (புறநானூறு, பா. 286). மற்றொரு பாடலில் (புறநானூறு, பா. 290) போர்க்களத்தில் முன்னேறிச் சென்று பகைவர்களைத் தாக்கி, பின்பு பகைவர்களால் தாக்கப்பட்டு உடல் சிதைந்து மரணமடைந்து கிடக்கும் தன் மகனைக் கண்ட தாய் பெருமிதம் கொள்வதுடன், புறமுதுகிட்டு ஓடாத அந்த இளைஞனின் செயலைக் கண்டு அந்தத்தாயின் மார்பிலிருந்து பால் சுரந்ததைப் பதிவு செய்துள்ளார் ஔவையார்.

**வாடுமுலை ஊறிச் சுரந்தன**
**ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே (புறநானூறு, பா. 295: 8)**

**மனமானது அது சிந்திக்கும் அளவிற்கு ஏற்ப விரைந்து செல்லும் தன்மை உடையது. அது ஒவ்வொரு ஒழுங்கீற்கும் துணையாக இருந்து வெற்றி பெறச் செய்கிறது (முல்லைப்பாட்டில் மாந்தர்களின் மனநிலை, ப. 22)**

இச்சிந்தனைக்கு ஏற்ப மேற்காணும் இரு பாடல்களிலும் வீரர்களின் தாய் தன் மகன் போர்க்களத்தில் வீரமரணம் அடைவதைப் பெருமையாகக் கருதியுள்ளனர். இதன் மூலம் அக்காலச் சமூகத்தின் மரபுகளையும், மக்களின் உணர்வுகளையும், ஔவையார் ஒரு சமூகவியல் அறிஞர் போல் படம் பிடித்துக் காட்டியிருப்பது, அவருடைய ஆளுமைச் சிறப்பை உணர்த்தும் விதமாக அமைகிறது.

**சமாதான தூதுவர்**

புறநானூற்றில் மூவேந்தர்கள், அதியமான், அவனுடைய மகன் பொகுட்டெழினி, மற்றும் நாஞ்சில் வள்ளுவன் ஆகியோர்களின் வீரச் சிறப்பினை, பல்வேறு கோணங்களில் ஔவையார் ஒரு புகைப்படக் கலைஞனைப் போல் விவரித்துள்ளார். இருப்பினும் அவருடைய உள்மனமானது போரை வெறுப்பதாகவே இருந்திருப்பதை அவருடைய பாடல்களில் (புறநானூறு, பா. 95, 367) காணமுடிகிறது. போரினால் ஏற்படும் துன்பங்களையும் துயரங்களையும் நன்கு உணர்ந்த ஔவையார் அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே போர் ஏற்படுகின்ற சூழலை உணர்ந்து தொண்டைமானிடம் தூது சென்று, அதியமானின் பலத்தையும் தொண்டைமானின் பலவீனத்தையும் தக்க முறையில் (வஞ்சப்புகழ்ச்சி அணியில்) எடுத்துச் சொல்லி அவர்களுடையே நடைபெறயிருந்த போரினைத் தடுத்து நிறுத்தியதில் அவருடைய மானுடநேயம் மிளிர்வதைக் (புறநானூறு, பா. 95) காணமுடிகிறது. மேலும், சேரமான் மாவண் கோவும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் ஆகிய மூவேந்தரும் ஓர் இடத்தில் இருந்ததைக் கண்ட ஔவையார் அவர்களை வாழ்த்தி, உலகம் முழுவதும் ஆண்ட மன்னராக இருப்பினும் அவர்கள் இறந்த பின்பு அவருடன் கூட வரப்போவது எதுவுமே இல்லை. எனவே ஏழை எளிய மக்களுக்கும் தானம் தந்து அவர்களையும் வாழ்வித்து வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக

இருப்பதே சிறந்தது என்பதைச் சுட்டிக்காட்டி, மக்களுக்கு நற்காரியங்கள் செய்து வீடு பேறு அடையுமாறு வேண்டிக் கொண்டதைப் புறநானூறு, பா. 367ஆம் பாடலில் காணமுடிகிறது. **நாட்டாட்சியும் வீட்டாட்சியும் நல்லதொருவகையில் இணைந்தாலன்றி தனி மனிதன் நிம்மதியாக வாழ முடியாது. (புறநானூற்றுப்பாடல்களால் அறிய வரும் வாழ்க்கைத் தத்துவங்கள், ப. 375)** இவரின் கூற்றுக்கிணங்க ஔவையார் வீரத்தை பாராட்டிருப்பினும் போரை விரும்பாத ஒரு சமாதான தூதுவராகவும், ஏழை எளிய மக்களை வாழ்விக்கக்கூடிய சமூகச் சிந்தனையாளராகவும் அவருடைய ஆளுமை அமைவதைக் காணமுடிகிறது.

**வாழச் செய்த நல்வினை அல்லது**
**ஆழுங் காலைப் புணை பிறிது இல்லை (புறநானூறு, பா. 367: 10-11).**

**“ஸ்பரேங்கர்** மனிதரின் ஆளுமைகளையும் 1. கொள்கை ஆளுமை (Theoretical Personality) 2. பொருளாதார ஆளுமை (Economical Personality) 3. கலை வழி (அ) அழகுணர்ச்சி ஆளுமை (Aesthetics Personality) 4. சமூக ஆளுமை (Social Personality) 5. அரசியல் ஆளுமை (Political Personality) 6. சமய ஆளுமை (Religious Personality) என வகைப்படுத்தியுள்ளார். (சமூகவியல் கோட்பாடுகள், ப. 116) இவ்ஆளுமைகளுள் ஔவையார் சமூக வகை ஆளுமையையும் அரசியல் ஆளுமையையும் பெற்று மனிதநேயம் மிக்வராகத் திகழ்வதை அவரது பாடல்கள் வழி அறியமுடிகிறது.

> **எந்த முடிவும் அபத்தமும் அதிருத்தியும் துன்பமும் நிறைந்ததே, எனினும் முடிந்தவரை எண்ணிப் பார்த்துச் சுய விமர்சனச் சக்தியோடும் சுய சிந்தனையோடும் முடிவெடுத்து, எடுத்த முடிவை நிறைவேற்றி வாழ்வின் இருளைப் போக்குவது மனிதனின் சுய கௌரவமான வாழ்வாகும். சுய உணர்வும், சுய தேர்வும் அதன்விளைவனைத்தையும் தாங்கும் நேர்மையும் உள்ளவனே வாழ்க்கையை நல்ல விசுவாசத்துடன் (In good faith) சந்திக்கிறான் என்பது இருபதாம் நூற்றாண்டின் நவீனத்துவ இலக்கிய தத்துவாதியான சார்த்ருவின் சிந்தனை. (நோயல் ஜோசப் இருதயராஜ், ப. 8)**

சார்த்ரு சிந்தனைகளை அடியொட்டி ஒவ்வொரு மனிதனும் சுயநலம் சார்ந்த வாழ்வை முடிந்தவரைத் தவிர்த்து பொதுநலம் சார்ந்த வாழ்வை மேற்கொண்டு சுய கௌரவத்தோடும் பிறர் வாழ்வின் இருளைப் போக்குபவராகவும் திகழும் பொழுது ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் அர்த்தம் உடையதாக மாறும் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. அந்தவகையில் ஔவையாரின் ஆளுமை தனித்துவம் மிக்கதாக அமைகிறது.

**முடிவுரை**

புறநானூற்றில் அதிகப் பாடல்களைப் பாடிய பெண்பால் புலவராக ஔவையார் திகழ்கிறார். இதுவே ஔவையாரின் ஆளுமைக்குச் சான்றாக அமைகிறது. கபிலர்- பாரி ஆகியோர் நட்பு புறநானூற்றில் உன்னதமாக அமைவது போல் ஔவையார்- அதியமான் நட்பு அமைவதை அவருடைய பாடல்வழி அறியமுடிகிறது. மேலும் அதியமான், அவருடைய மகன் பொகுட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன் ஆகியோரின் வீரத்தைப் பல நிலைகளில் ஔவையார் பாராட்டியிருப்பினும், அவர் அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே போர் ஏற்பட்ட சூழல் மற்றும் சேரமான் மாவண்கோவ், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி சோழன் இராசசூயம் வேட்ட பெறுநற் கிள்ளி ஆகிய மூவேந்தர்களை ஔவையார் சந்தித்த சூழலில் அவர்களிடம் சமாதானத்தையும் மனித நேயத்தையும் வலியுறுத்தி போரை விரும்பாத சமாதான தூதுவராகத் திகழ்கிறார். ஒரு தேசத்தின் வளமும், இயல்பும், பண்பும் அந்தத் தேசத்தில் வாழும் ஆற்றல் மிக்க இளைஞர்களின் செயலைப் பொறுத்து அமையும். எனவே, இளைஞர்களை நல்வழிப்படுத்தி நாட்டு வளத்தைக் காப்பது தலையாயக் கடமை என்பதை மனித நேயத்தோடு ஔவையார் தனது பாடல்களில் வலியுறுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. அரசர்களுக்கிடையே போர் நடைபெறுவதனால் வீரர்களின் உடலில் மட்டும் அம்பு தைக்கப்படுவதில்லை வறுமையில் வாடும் புலவர்கள் நாவிலும் அந்த அம்பு தைக்கும் என்பதைக் குறிப்பிடுவதிலிருந்து

மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

ஔவையார் ஏழை எளிய மக்கள் மீதும், புலவர்கள் மீதும் கொண்ட மனித நேயத்தைக் காணமுடிகிறது. ஔவையார் அரசியல் ஆளுமை மிக்கவராகவும் சமாதானத்தையும், அமைதியையும், வளர்ச்சியையும் விரும்பக்கூடிய மனிதநேயமிக்கவராகத் திகழ்வதை அவரது பாடல்வழி அறியமுடிகிறது.

**குறிப்புகள்**

[1] இரவி, கெ. *பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி.* நிலா சூரியன் பதிப்பகம், சென்னை, 2017.

[2] இராகுலன், இரா., தனலட்சுமி, வ. "கணியன் பூங்குன்றனாரின் பாடலில் ஊழ், பகுத்தறிவுக் கொள்கை, நிலையாமை பிறவிக் கோட்பாடு." ப. 98, *மணற்கேணி.* தொகுதி 2, வெளியீடு 9, இதழ் 74, ஜூலை - 2025.

[3] கிருஷ்ணமூர்த்தி, ஜெ. *சமூகவியல் கோட்பாடுகள்.* அண்ணாமலைப் பல்கலைக்கழம், சிதம்பரம், 2000.

[4] சுப்பையா, அரங்க. *சமூகவியல் அறிகர்களும் கோட்பாடுகளும்.* ராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை, 2003.

[5] சிந்து, கு., இரா. ரவிச்சந்திரன். "முல்லைப்பாட்டில் மாந்தர்களின் மனநிலை." *மணற்கேணி.* தொகுதி - 2, வெளியீடு 9- இதழ் 74, ஜூலை – 2025, ப.22.

[6] சுசா. "விவேக சிந்தாமணி கூறும் மானுட விழுமியங்கள்." *தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி -7, வெளியீடு -2, ஜனவரி - 2025.

[7] நடராசன், தி, சு. *கவிதையெனும் மொழி (2002).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2003.

[8] நோயல் ஜோசப் இருதயராஜ். *கோட்பாட்டு விமர்சன யுகம் விமர்சனக் கோட்பாட்டு யுகம்.* அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2013.

[9] பக்தவத்சல பாரதி. "மனித நேயத்திற்கான அறிவுத் துறையே மாண்டவியல்." *காலச்சுவடு,* தொகுதி 37, வெளியீடு 8, இதழ் - 308, ஆகஸ்ட் -2025, ப.53.

[10] மாணிக்கவாசகன். *புறநானூறு.* உமா பதிப்பகம், சென்னை, 1998.

[11] முனியாண்டி, சி. "புறநானூற்றுப் பாடல்களால் அறிய வரும் வாழ்க்கைத் தத்துவங்கள்." *தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி - 8, வெளியீடு -1, ஜூலை – 2025, ப. 375.

[12] விக்னேஷ், கா. "ஒப்பிலக்கிய நோக்கில் குறுந்தொகையும் சாலொமோன் பாடல்களும்." *பெயல்,* தொகுதி - 8, துளிர் -1, அக்டோபர் -2021 - மார்ச் – 2022.

[13] ஜெய்சங்கர், இரா. *புலவர் தெரியாத நற்றிணை பாடல்களில் ஆளுமை திறம்.* தாயறம் பதிப்பகம், திருச்சி, 2003.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.